Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The State of Dancing Women in *Pathitrupatthu*

**Dr T. Buvaneswari,** Assistant Professor, Department of Tamil,
Wavoo Wajeeha Women's College, Kayalpatnam - 628204, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3961-0845
DOI: 10.5281/zenodo.6622287

## Abstract

*In Sangam literature, Women belonging to the Koothar, panan and porunar traditions are called 'adumakalir' (dancing women). They get the material by expressing their artistic talent under the names of 'virali' and 'padini'. The standard of living morality and morality of women are expressed in the songs. It is also done to soothe other panmarapinars without slipping. This article explores the dancing women who have lived the life combined with art life.*

**Keywords:** Women Artist, Virali, Padini, Self Discipline, Art Life.

.

**References**

[1] Ilampooranar (Text Editor), *Tholkapiyam Porulathigaram*.
[2] Dr B. Kannadasn. *Tamil Ilakiyathil Vazhviyal Nerikal*.
[3] Dr V. Nagarasan (Text Editor), *Malaipadukadam*.
[4] Dr V. Bala Subramiyan (Text Editor), *Paripadal.*
[5] Dr Rama Subramaniyan (Text Editor), *Purananooru.*
[6] Dr R. Mohan (Text Editor), *Porunaratru Padai.*

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# ஆடுமகளிர் நிலை உணர்த்தும் பதிற்றுப்பத்து

**முனைவர்.த. புவனேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டினம் 628204, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-6323-4494
DOI: 10.5281/zenodo.6622287

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் கூத்தர், பாணர், பொருநர் மரபைச் சார்ந்த பெண்கள் ஆடுமகளிர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் விறலி, பாடினி என்ற பெயரமைப்புடன் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தி பொருள் பெறுகின்றனர். ஆடுமகளிரின் வாழ்வியல் நிலை ஒழுக்கப்பண்பு கொண்டுள்ளதாகவும் நீதி நெறி வழுவாமல் பிற பாண் மரபினரை ஆற்றுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. கலை வாழ்க்கையுடன் இணைந்த பரிசில் வாழ்க்கையை வாழ்ந்து வந்திருக்கின்றனர் ஆடுமகளிர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**திறவுச்சொற்கள்:** ஆடுமகளிர், விறலியின் தன்னொழுக்கம், கலை வாழ்க்கை,

**முன்னுரை**

வரலாறு பெண்மையை பெருமை அடையச் செய்திருக்கின்றது என்ற போதிலும் சங்க இலக்கிய புணர்வுகள் விசித்திரமானவை. உலக இலக்கியங்களில் தனித்துவமான தன்னிகரற்ற இலக்கியங்கள் தமிழ்ச்சங்க இலக்கியங்களாகும். சங்க காலம் பொற்காலம். சங்க காலத்தில் பெண்களின் நிலை இழிவாகப் பேசப்படவில்லை என்ற ஆய்வாளர்களின் கூற்றில் பல்வேறு மறுக்க முடியாத உண்மைகள் இருந்தாலும், சில பெண்களின் நிலை பல சூழ்நிலையையும் சமூகப் பின்னனிகளையும் கொண்டுள்ளதாக அமைந்திருக்கின்றது. அந்நோக்கில் சங்க தொகை நூல்களில் புறநூலான பதிற்றுப்பத்து ஆடுமகளிரான விறலியரைக் குறித்து ‘விறலியாற்றுப்படை’ என்ற துறையில் விவரித்திருக்கின்றது. அத்தகையவிறலியரின் நிலையைப் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**ஆற்றுப்படை அமைப்பில் ஆடுமகளிர்**

ஆடுமகளிர் என்பவள் பாண்மரபைச் சேர்ந்த பெண்ணாவாள். பாண்மரபைச் சார்ந்தவள் என்று குறிப்பிடும் போது பாடினி, விறலி என்னும் பெயர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன. பதிற்றுப்பத்தில் ‘விறலி’ என்ற பாணர்குல மரபுப் பெண் ஆற்றுப்படுத்துவதால் விறலியாற்றுப்படை என்னும் துறை வாயிலாக 5 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கலைஞர்களின் வாழ்வை சித்தரிப்பதில் ஆற்றுப்படையின் பங்கு முக்கியமானது. ஆற்றுப்படுத்துவதற்கு உரியோர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் ஆவர். இதனை,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிய**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுநீஇச்**
**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும் (இளம்பூரணனார், தொல்காப்பியம் பொரு., நூ.எ.36)**

என்று தொல்காப்பிய அடிகள் கூறுகின்றன. ஆற்றுப்படை இலக்கியம் அமைப்புச் சார்ந்ததன்று. அது கலைஞர்களின் வாழ்க்கையையும் அதன் பின்னணியில் பொருள் சார்ந்ததாகும்.

**மனிதனின் மனதில் உள்ள அருளுணர்வின் அடிப்படையில் உருவான ஒரு மானுட இலக்கியமே ஆற்றுப்படை இலக்கியமாகும். (முனைவர் பெ.கண்ணதாஸ், தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் நெறி, ப.12)**

என்று ஆற்றுப்படை நூலுக்கு முனைவர் பெ. கண்ணதாஸ் அழகான முறையில் விளக்கம் கொடுக்கின்றார்.

**ஆடுமகளிரின் நிலை**

ஆற்றுபடை இலக்கியத் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் கலைஞர்களின் பரிசில் வாழ்க்கை. பெண்மையைப் போற்றுகின்ற இயல்பு தமிழிலக்கியத்திற்கு உரித்தானது. பெண்கள் இல்லை என்றால் கவிதை என்ற ஒன்றிற்கு வேலை இருந்திருக்காது. பொருளாதார முறையில் வளர்ச்சி அடைய பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகின்றது. பாணர்களுடன் விறலியர் சென்று அவர்களும் தங்கள் பங்கிற்கு அவரது உழைப்பினை வெளிப்படுத்தி பரிசு பெற்றிருக்கின்றனர்.

விறல்பட ஆடும் விறலியர், செய்யத்தகுந்த தொழிலை அறிந்தவர்களாகவும் பழமையில் மரபு முறைபிறழாமல் போற்றுதற்குடைய வலிமை பொருந்திய கடவுளை வாழ்த்திப் பாடக்கூடியவர்களாக இருந்திருக்கின்றனர்.

**கடவது அறிந்த இன்குரல் விறலியா;**
**தோன்று ஒழுகு மரபின் தம் இயல்பு வழாஅது**
**அருந் திறற் கடவுட் பழிச்சிய பிள்ளை. (முனைவர்.வி.நாகராசன் (உ.ஆ) மலைபடு பா. 536 -538)**

என்ற அடிகள் பெண்கள் தங்கள் தொழில்முறையில் கைதர்ந்தவர்கள் அனைத்தும் ஒழுங்குபட அறிந்தவர்கள் என்று கூறுகின்றன. விறலி என்னும் பாணர்குலப் பெண் விறல்பட பாடுவதாலும், விறல்பட ஆடுவதாலும் இப்பெயரினை பெற்றிருக்க வேண்டும். **'விறல்பட'** என்றால் தன் உள்ளக்குறிப்பு புறத்தே தோன்றும்படி ஆடுவது. பாண்மகள் பாலைப்பண்ணை அழகிய மிடற்றுப் பாடலின் வழி இசை இலக்கணத்துடன் பாடுகின்ற பொழுது பாடலில் வல்ல ஆடல் மகளிரான விறலி அசைந்து ஆடுவாள் என்பதை, **ஒருதிறம் பாடல் நல் விறலியா; ஒல்குடி நுடங்க (முனைவர்.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), பரிபாடல் பா.எ.17)** என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது. விறலி என்பவள் ஆடும் திறத்தை உடையவள் அதனால் ஆடுமகள் என்று சித்தரிக்கப்படுகிறாள். மேலும் விறலி மெல்லியல் விறலி, சில்வளை விறலி வளக்கை விறலி எனவும் அழைக்கப்படுகின்றாள். **வளைக் கை விறலியா; படப்பைக் கொய்த (முனைவர் இராமசுப்பிரமணியன் (உ.ஆ), புறநானூறு, பா.எ.152:1 – 3)** என்று அடிகள் வளையலணிந்த கைகளையுடைய விறலியர் என்பதை எடுத்துரைக்கின்றது.

**சில்வளை விறலியும் யானும் எல்விரைந்து** (மேலது, பா. 60:5)
**மெல்இயல் விறலி! நீ நல் இசை செவியின்** (மேலது, பா. 133:1)

என்று விறலியை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர்.

விறலி 16 வயது மதிக்கத்தக்க பெண். அவள் கலைஞர்களின் குடியில் உருவானவள். ஆதலால் இயல்பாகவே அவளிடம் மென்மைத்தன்மையும் கலைநயமும் கட்டாயம் அமைந்திருக்கும். இந்நிலையை புறநானூற்றில் கூறியிருப்பதோடு மட்டுமின்றி பதிற்றுப்பத்திலும் அவளின் மென்மைத் தன்மை பறைசாற்றப்படுகின்றது.

**செல்லா யொதில் சில்வளை விறலி**
**மலர்ந்த வேங்கையின் வயங்கிழை அணிந்து**
**மெல்லியல் மகளிர் எழில்நலம் சிறப்பப்**
**பாணர் பைம்பூ மலைய இளையர்**
**இன்களி வழாஅ மென்சொல் அமர்ந்து**
**நெஞ்சுமலி உவகையர் வியன்களம் வாழ்த்த (பதிற்றுப்பத்து - 40 : 21-26)**
**மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்**
**செல்லா மோதில? சில்வளை விறலி! (பதிற்றுப்பத்து - 57 : 5-6)**

சிலவாகிய வளையல்களை அணிந்தவளான விறலியே!

மென்மையான நிலத்திடத்தே அமைந்த வழியில், உன் சிறிய காலடியில் நடந்து செல்லலாம் என்று ஒரு விறலி மற்றொரு விறலியிடம் ஆற்றுப்படுத்தும் விதமாக இப்பாடல் அமைகின்றது. பொதுவாக பலவாகிய வளையல்களை கையில் அணிந்திருப்பது பெதும்பை பருவப் பெண்கள் ஆவர். **'சில்வளை'** என்று குறிப்பிடும் போது சிலவாகிய வளையல்களை மட்டும் கையில் அணிந்திருக்கும் இளமைப்பருவத்துப் பெண்கள் ஆடல் முதலிய கலைகளுக்கு சிறந்தவர்கள். இதனால்தான் ஆடுமகளிர் என்று அழைக்கப்படுகின்றனர். மேலும் ஆடுமகளிரின் அழகு நிலையில் கூந்தல் பற்றி பேசப்படுகின்றது. பெண்கள் ஆண்கள் என இருபாலருக்கும் அழகு கொடுப்பது தலைமுடி. அத்தகைய தலைமுடியை அலங்கரித்து அதை பராமரிப்பதில் பெண்களின் பங்கு முதன்மையானது. சங்க இலக்கியத்தில் கூந்தலின் சிறப்புக் குறித்து பல இடங்களில் பேசப்பட்டு இருக்கின்றது.

**அறப்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல் (முனைவர் இரா.மோகன் (உ.ஆ), பொருநராற்றுப்படை, பா.எ.25)** ஆற்றுமணல் போன்ற கூந்தலையும் எட்டடாம்பிறை போல் நெற்றியையும் கொண்டவள் என்கின்றது பொருநராற்றுப்படை.

ஆற்றுமணல் போன்ற கருமை நிறம் கொண்ட நீண்ட கூந்தலை ஆடுமகளிர் தொங்கவிட்டு இருக்கின்றனர். அந்தக் கூந்தல் அவர்கள் நடக்கின்ற வேளையில் அசைந்தபடி ஆடுகின்றது. இதனை பதிற்றுப்பத்தில் **துயலும் கோதைத் துளங்கியல் விறலியர் (பதிற்றுப்பத்து - 49: 2)** என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் பெண்களின் கூந்தலை ஐந்து வகையாகப் பிரித்து இருக்கின்றனர். விறலியர்கள் தங்களின் ஆடல் கலையை பிறரிடம் வெளிப்படுத்தும் போது கூந்தல் அலங்காரம் அவசியம். அத்தகைய நோக்கில் கூந்தலைப்பராமரிக்க நெய்பூசி, அகிற்புகை ஊட்டி அடர்த்தியாக வளர்ந்திருப்பதை சங்க இலக்கியப் பாடல்கள் பல பதிவு செய்திருக்கின்றன.

**விறலியரின் தன்னொழுக்கம்**

விறலி நாடோடி வாழ்க்கை வாழக்கூடிய இசைக்கலைஞர்களுடன் இணைந்து மன்னனிடம் பரிசில் பெறச் செல்கின்றவள். இருப்பினும் விறலி தன்னிலை உணர்ந்தவள். எல்லை மீறாதவள் சுயமரியாதை மிக்க தன்னொழுக்கம் கொண்டவள். தம் குடும்ப வறுமைத்தீர அரசர்களை, வள்ளல்களை நாடிச் செல்லும் போது தன் இசையின் திறன் அறிந்து, வரிசையறிந்து பரிசு பெறுபவளாகத் திகழ்கின்றாள். விறலியரின் கற்புநெறி அக இலக்கியத்தில் பெருமை கொள்ளும் விதத்தில் அறிவுறுத்தப்படுகின்றது. விறலியரின் கற்பு முல்லை பூவிற்கு ஒப்பாக பேசப்படுகின்றது என்பதனை, **முல்லை சான்ற கற்பின் மெல்லியல்**

**முடமா னோக்கின் வாணுதல் விறலியா (முனைவர் இரா. மோகன் (உ.ஆ),**

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**சிறுபாணாற்றுப்படை, பா.எ.30 – 31)** என *சிறுபாணாற்றுப்படை* பாடல் அடிகள் உணர்த்தியிருக்கின்றன. பாலை நெடுவழியில் முல்லை சான்ற கற்பினளாகிய பாணனின் மனைவியும் செல்கிறாள். முல்லை என்னும் காத்திருக்கும் கற்புநெறி கொண்டவள் பாணன் மனைவியாகிய விறலி. மாரிக் காலத்தின் மழைத்துளிக்கு மட்டுமே பூக்கும் முல்லை போன்று அவளது கற்புநெறி தவறான பாதைக்கு செல்லாதது. பதிற்றுப்பத்தில் சேரன் செங்குட்டுவனிடம் பரிசில் பெற்ற விறலியர் பரிசில் பெற இருக்கும் மற்றொரு விறலியரை ஆற்றுப்படுத்தும் போது **கொளைவல் வாழ்க்கைநும் கிளையினிது உணீகியர் (பதிற்றுப்பத்து - 49 : 3)** என்கின்றனர். விறலி ஒருத்தி மற்றொரு விறலியர் கூட்டத்திடம் நாங்கள் சேரன் செங்குட்டுவனிடம் செல்கின்றோம் நீங்களும் அவனிடம் வாருங்கள். பாடலின் வலிமையாலே வாழும் வாழ்க்கை நெறியினையுடைய நும் கூட்டத்தவர் இனிதாக உண்டு களிப்பாராக என்று கூறுகின்றாள். விறலியர் தங்களுடைய பாடல் திறத்தால் மட்டும் வாழ்க்கையை வாழக் கூடியவர்கள். வாழ்க்கையை வாழ்வதற்கும் உணவு, உடை உறைவிடம் என அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வதற்கும் அவர்கள் தவறான ஒழுக்கக் குறைவான வழியை நாடிச் செல்வதில்லை. மழைக்காக காத்திருக்கும் முல்லைப்பூ போன்று பாடல் வலிமையால் கிடைக்கக்கூடிய பரிசிற்கு காத்திருக்கும் கற்புடைய பெண்களாக விறலியர் விளங்கியிருக்கின்றனர்.

**ஆடுமகளிர்க்கு உதவிய மன்னர்கள்**

'மன்னன் உயிர்த்தலை மலர்தலை உலகம்' என்பது வழக்கு மன்னன் சிறந்தவனாக, உயர்சிந்தனை உடையவனாக நடுநிலை ஆட்சி நடத்துபவனாக குடிகள் மீது அன்புடையவனாக சிறந்த ஆண்மை உடையவனாக இருந்தால் அந்த ஆட்சி சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமையும் மக்களும் நல்ல பலனை அடைவர். 'திருவுடை மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேன்' என்று சொல்லும் அளவிற்கு மன்னர்கள் மக்கள் மத்தியில் பெயர் பெற்றனர். மக்களுக்காக மன்னர் என்னும் கோட்பாட்டில் அவர்கள் செயல்பட்டனர். **அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல் (முனைவர் இரா.மோகன் (உ.ஆ), பொருநராற்றுப்படை, பா.எ.230)** என மன்னன் சிறப்பு பொருநராற்றுப்படையில் பேசப்படுகின்றது. மன்னன் மக்களுக்காகவே தனது செங்கோல் ஆட்சியை செலுத்தியிருக்கின்றான். மன்னன் இல்லை என்று கூறி தன்னை நாடி வருபவர்களுக்கு பரிசினை பாரபட்சம் பார்க்காமல் வழங்கியிருக்கின்றான்.

விறலியர் பரிசு பெறச் செல்லும்போது சாதரனமாக தங்களது வறுமை நிலையைக் கூறி பரிசு பெறவில்லை. வறுமை என்னும் பகை ஒழிய தங்களது கலைத்திறமையை வெளிப்படுத்தி பரிசு பெறுகின்றனர். அதற்காக பாணர்களின் யாழை எடுத்துச் செல்கின்றனர். பதிற்றுப்பத்து குறிப்பிடும் விறலியாற்றுப்படையில் விறலியர் தனிப்பட்ட முறையில் சேர மன்னனிடம் பரிசில் பெறச் செல்கின்றனர். இத்தகைய நிகழ்வு மன்னன் மீது பெண்கள் கொண்ட மதிப்புணர்வை வெளிப்படுத்துகின்றது.

விறலியர், பாணரது கையிடத்தாகிய தாழக்கட்டிய நரம்பினைக் கைவிரலாலே மீட்டி வாசித்தலை விரும்பும் பேர்யாழினிடத்தே, பாலைப் பண்ணை எழுப்பியவாறு, குரல் என்னும் நரம்போடு ஒன்றுபட்ட இனிய இசைப் பகுதியிலேயே தழிஞ்சியென்னும் துறை பொருளாக அமைந்த பாட்டினைக் குரவெடுத்து பாடியபடி சென்று, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை கண்டு பரிசு பெற்று வர எண்ணுகின்றனர். போர்க்களத்தில் புறங்கொடுத்து ஓடாத மன்னனிடம், அதாவது தனக்கு நிகரான பலம் வாய்ந்த மன்னருடன் போர் செய்து பாசறைக்கண் இருக்கின்ற அம்மன்னனிடம் சென்றால்

அப்பகைவரை அழித்துப் பெற்ற செல்வங்களை அவன் நமக்கு வழங்குவான். என்று விறலியர்கள் மற்றொரு விறலிக் கூட்டத்தினருடன் உரைக்கின்றனர்.

**முடிவுரை**

சமூகத்தில் இன்றும் ஆடல்மகளிர் காணப்படுகின்றனர். இவர்கள் தோற்றமுறையில் வேறுபட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இக்கலைஞர்கள் பெரும்பாலும் தமிழ்ச் சமூகத்தில் தங்கள் கலைகளை நிகழ்த்தி வாழ்ந்து இருக்கின்றனர். பின்னர் மன்னன், வள்ளல் என பலரும் தானம் வழங்க முன்வராத நிலையில் இவர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கிவிட்டனர். தங்கள் கலைகளை முழுவதுமாக கையாளத் தொடங்கவில்லை. வறுமையைப் போக்கிக் கொள்ளக் கிடைத்த வேலையைச் செய்து வந்தனர். பின் ஓரிடத்தில் கூத்து நடத்தி தங்கள் பசியைப் போக்கிக் கொண்டனர். ஆயர் வருகைக்குப் பின்னர் பெருமாற்றமும், கலாச்சார மாற்றம் ஏற்பட்டதால் இவர்கள் நிலை பெருமளவிற்கு பின்தள்ளப்பட்டு கலைகள் மழுங்கடிக்கப்பட்டது. கலைகள் மறைய வேண்டும் என்பது மக்களின் விருப்பம் அல்ல. கலைகள் நம் விருப்பத்திற்கும் இரசிக்கும் திறனுக்கும் ஏற்ப இருக்க வேண்டும் என்பதுதான் இன்றைய சமுதாய சூழ்நிலை. அந்த வகையில் பதிற்றுப்பத்து குறிப்பிடும் ஆடுமகளிர் நிலையிலிருந்து இன்றைய நடன கலைஞர்களில் ஆடுமகளிர் நிலை வேறுபட்டு நிற்கின்றது.

**துணை நூற்பட்டியல்**

[1] இளம்பூரணனார்(உ.ஆ), *தொல்காப்பியம் பொருளதிகாரம்.*

[2] முனைவர் பெ.கண்ணதாஸ், *தமிழ் இலக்கியத்தில் வாழ்வியல் நெறி.*

[3] முனைவர் வி. நாகராசன் (உ.ஆ), *மலைபடுகடாம்.*

[4] முனைவர் வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), *பரிபாடல்.*

[5] முனைவர் இராமசுப்பிரமணியன் (உ.ஆ), *புறநானூறு.*

[6] முனைவர் இரா.மோகன் (உ.ஆ), *பொருநராற்றுப்படை.*

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.